LIBRARY
12 OCT 2011
Eastern University, Sri Lanka.

கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

மூன்றாம் வருட/முதலாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு
2009/2010 (ஆகஸ்ட்/செப்ரம்பர் 2011)

**TLS 3104** தேர்ந்தெடுத்த பாடநூல்கள் (கி.பி.19)

நேரம் : 03 மணித்தியாலங்கள்

எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடை தருக.

---

01. தூதுபோர்ச் சுருக்கத்தில் தருமன் சூதாட்டத்திற்கு உடன்படுமாற்றினை வில்லி புத்தூராழ்வார் விளக்கும் முறையில் காணப்படும் சிறப்புக்களை எடுத்துக்கூறுக.

02. கம்பன் சடாயுவின் தோற்றப் பொலிவினை வர்ணிக்கும் திறனை உதாரணங்களுடன் வெளிப்படுத்துக.

03. “காளமேகப் புலவரது தனிப்பாடல்களில் வித்துவப் புலமையே வெளிப்படுகின்றது.” ஆராய்க.

04. திருக்குற்றாலக் குறவஞ்சி விஜயநகர, நாயக்கர்கால இலக்கியப் பண்புகளைப் பெற்றிருக்குமாற்றினை பின்வரும் அடிப்படைகளில் விளக்குக:

    (அ) பக்தி (ஆ) வர்ணனை
    (இ) பொது மக்கட் சார்பு

05. தாயுமான சுவாமிகள் பைங்கிளிக் கண்ணியில் பக்தியுணர்ச்சியை வெளிப்படுத்த அகத்திணை மரபுகளைப் பின்பற்றியுள்ளமையை எடுத்துக்காட்டுக.

06. வள்ளலாரது திருவருட் பாடல்களில் சமகால சமூகப் பிரச்சினைகள் இடம்பெற்றுள்ளன என்று கூறலாமா? ஆராய்க.

********